# எங்களுக்கெல்லாம் தலைவர் பெரியார்தான்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி... முதல் பக்கத் தொடர்ச்சி

**மு.க.ஸ்டாலின் :** அவர் தொடர்ந்து இந்த வேலைகளைத்தான் செய்து கொண்டு இருக்கிறார். அது குறித்து நாங்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறோம். உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. வரும் 4 ஆம் தேதி வழக்கு வருகிறது. அப்போது தெரியும்!

**பெரியார்தான் எங்கள் தலைவர்களுக்கெல்லாம் தலைவர்!**

**செய்தியாளர் -** *பெரியார் மீது இன்னும் விமர்சனம் வைத்து வருகிறார்களே அது பற்றி.......*

**மு.க.ஸ்டாலின் :** பெரியாரை மரியாதை குறைவாக பேசக்கூடியவர்களுக்கெல்லாம் நான் மரியாதை கொடுக்க தயாராக இல்லை. ஏன் என்றால், பெரியார் தான் எங்களுக்கு தலைவர். எங்கள் தலைவர்களுக்கெல்லாம் தலைவர் அவர்தான். அதனால், அதை நாங்கள் பெரிதுப்படுத் தவும் தயாராக இல்லை. பொருட்படுத்தவும் தயாராக இல்லை.

**செய்தியாளர் -** ஈரோடு சட்டமன்ற இடைத் தேர்தல் பற்றி....

**மு.க.ஸ்டாலின் :** 5 ஆம் தேதி தேர்தல், 8 ஆம் தேதி தேர்தல் முடிவு. அப்போது தெரியும்.

**செய்தியாளர் -** *ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் உங்களுடைய எதிர்பார்ப்பு என்ன. கடந்த முறை தமிழ்நாடு புறக்கணிக் கப்பட்டதாக அறிக்கை வெளியிட்டிருந்தீர்கள். அது பற்றி......*

**மு.க.ஸ்டாலின் :** நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்றது. அதில் தீர்மானம் போட்டு இருக்கிறோம். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபையில் தமிழ்நாட்டின் கோரிக்கைகள் குறித்து வலியுறுத்த சொல்லியிருக்கிறோம். பார்ப்போம். நிதிநிலை அறிக்கை வெளியிட்ட பிறகு தான் என்ன என்பது தெரியும்.

**சட்டம் – ஒழுங்கு சிறப்பாகவே உள்ளது!**

**செய்தியாளர் -** *சட்டம் - ஒழுங்கு குறித்து எதிர்கட்சிகள் தொடர்ந்து கேள்வி எழுப்பி வருகிறார்கள். அது பற்றி...........*

**மு.க.ஸ்டாலின் :** வேண்டுமென்றே திட்டமிட்டு அங்கொன்றும், இங்கொன்றுமாக நடைபெறும் சில சம்பவங்களை பெரிதாக பூதாகரமாக்குகிறார்கள். அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. எங்களைப்பொறுத்தவரை சட்டம்ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது. அதனால்தான் வெளிநாட்டில் இருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் தொழிற்சாலைகள் எல்லாம் தொடர்ந்து வந்துகொண்டி ருக்கிறது.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

---

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஆட்சியர் மரு.ச.உமா, ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ., வி.எஸ்.மாதேஸ்வரன் எம்.பி., எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்!

# ஓமலூர் - சங்ககிரி - திருச்செங்கோடு - பரமத்தி சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி!

## அமைச்சர் எ.வ.வேலு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்!

*நாமக்கல், பிப்.2-*

*நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகராட்சி, கரட்டுப்பாளையத்தில் ஓமலூர் -சங்ககிரி - திருச்செங் கோடு - பரமத்தி சாலையை கடின புருவங்களுடன் கூடிய இருவழிச்சாலையில் இருந்து நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்காக அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.*

*மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்ட குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர். ஈஸ்வரன், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*விழாவில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு ஓமலூர்-சங்ககிரி-திருச்செங்கோடு-பரமத்தி சாலையை கடின புருவங்களுடன் கூடிய இருவழிச்சாலையில் இருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்காக அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.*

*பின்னர் அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-*

*திருச்செங்கோடு என்பது "ஆணும் பெண்ணும் ஒன்றுதான்" என்னும் தத்துவத்தை வெளிப்படுத்தும் ஆன்மீக மண். கலைஞர் அவர்களும் "ஆணுக்கு பெண் நிகர்" என்பதை வலியுறுத்தி சொத்தில் சம உரிமை பெற்றுத் தந்தவர். அமெரிக்க அதிபர் பாராளுமன்றத்தில் பேசும் போது அமெரிக்காவின் பொருளாதாரம் வளர்ச்சி பெற்றதற்கு முழுமுதற்காரணம் நெடுஞ்சாலை துறை சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளதே ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில், தமிழ்நாட்டின் சாலைகள் சிறப்பாக வளர்ச்சி பெற்றால் தான் தமிழ்நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெற இயலும். சாலைகள் வளர்ச்சி பெற்றால் தான் வேளாண் உற்பத்தி பொருளை சந்தைப்படுத்த இயலும். தொழிற்சாலை உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த சாலை வளர்ச்சி என்பது மிகவும் இன்றியமையாததாகும்.*

**பொருளாதார வளர்ச்சிக்கு சாலை வசதி முக்கியம்!**

*வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டுமென்றால் விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து மூலம் தான் பயணிக்க முடியும். அந்த வகையில் விமானம் மற்றும் போக்குவரத்து வசதியைப் பெற சாலை மிகவும் முக்கியமான ஒன்றாகும். இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் "அமெரிக்க அதிபர் கென்னடி" கூறியது போல், பொருளாதார வளர்ச்சிக்கு சாலை முக்கியம் என்பதன் அடிப்படையில், முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்.*

*இத்திட்டத்தின் கீழ், மாவட்ட மற்றும் தாலுகா தலைமையகங்களை இணைக்கும் முக்கியமான மாநில நெடுஞ்சாலைகள் 2200 கிமீ நீளத்திற்கு நான்கு வழிச்சாலையாக விரிவு படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2021-22 ஆம் நிதியாண்டில் 253.62கி.மீ சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.*

*2022-23 ஆம் நிதியாண்டில் 157.10கி.மீ சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப் பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. 2023-24 ஆம் நிதியாண்டில் 166.22கி.மீ சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. 2024-25 ஆம் நிதியாண்டில் 254.32கி.மீ சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.*

**57 பணிகளுக்கு ரூ.154 கோடி நிதி ஒதுக்கீடு!**

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நாமக்கல் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் நெடுஞ்சாலை துறை சார்பில் 227 பணிகள் 412 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் 57 பணிகளுக்கு ரூ.154 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.*

*நெடுஞ்சாலைத் துறையின் கிராம சாலைகள் அழகு சார்பில் நாமக்கல் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.67 கோடி மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய சாலைகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் 37 சாலை பணிகளுக்கு ரூ.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.*

*அருள்மிகு நைனாமலை வரதராஜர் திருக்கோவி லுக்கு பக்தர்கள் சென்று வர மண்சாலை அமைக்கப்பட்டு வந்த நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கப்படும் என அறிவித்தார்கள். இந்த அறிவிப்பின்படி சாலை அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான கொல்லிமலையில் விபத்துகளை குறைக்க ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் முறையில் சிறப்பு தடுப்பான்கள் அமைக்கப்பட்டுள்ளன.*

**தரைமட்ட பாலங்கள் தரம் உயர்த்த உத்தரவு!**

*நாமக்கல் புறவழிச்சாலை ரூ.207 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்ற வருகின்றன. அதே போன்று திருச்செங்கோடு புறவழிச் சாலை ரூ.124 கோடி மதிப்பீட்டில் நடைபெற்ற வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள 1281 தரைமட்ட பாலங்களை தரம் உயர்த்த உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 10 தரைமட்ட பாலங்கள் ரூ.29 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.*

*முன்னதாக, திருச்செங்கோடு நகர் புறவழிச்சாலை பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், திருச்செங்கோட்டில் நெடுஞ்சாலைத் துறை சார்பில், சாலை ஓரங்களில் மரக்கன்றுகளை நடும் பணிகளை தொடங்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில், தா.கார்த்திகேயன், ஜி.தங்கவேல், கு.கோ.சத்தியபிரகாஷ், நளினி சுரேஷ்பாபு, இரா.சந்திரசேகர், (க&ப) சி.சசிக்குமார், முருகேசன், கே.ஆர்.திருகுணா உட்பட பல துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (31.01.2025) திருச்செங்கோடு நகர் புறவழிச்சாலை பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நகரமைப்பு மண்டல திட்ட குழு உறுப்பினர் எஸ்.எம்.மதுரா செந்தில் உட்பட பலர் உள்ளனர்.

---

### ஊரக வளர்ச்சி – ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்

# ககன்தீப் சிங் பேடி ஐ.ஏ.எஸ். தந்தையார் - மிகச் சிறந்த அறிஞராக விளங்கிய தர்லோச்சன் சிங் பேடி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, பிப். 2-**

**ககன்தீப் சிங் பேடி, ஐ.ஏ.எஸ். அவர்களின் தந்தையார் தர்லோச்சன் சிங் பேடி அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தி வருமாறு:-**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி அவர்களின் தந்தையார் தர்லோச்சன் சிங் பேடி அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஃபரித்கோட் அரசு கல்வியியல் கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய அவர், திருக்குறள் மீது மிகுந்த பற்று கொண்டவராக விளங்கினார்.

"மனிதர்கள் மீதான அன்பை மையப்படுத்தியதாகவே திருக்குறள் திகழ்கிறது; அதனையேதான் குரு நானக் அவர்களும் பரப்புரை செய்தார்" என்று கூறிய அவர், குறளின் கருத்துகளை எடுத்துச்சொல்லும் தூதுவராக, திருக்குறளைப் பஞ்சாபி மொழியில் மொழிபெயர்த்தார். அவரது இந்தப் பணி, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மிகச் சிறந்த அறிஞராக விளங்கிய அவரது மறைவு, தமிழ்நாட்டுக்கும் பஞ்சாப் மாநிலத்திற்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும். தந்தையை இழந்து வாடும் ககன்தீப் சிங் பேடி அவர்களுக்கும், அவரது பிரிவால் துயருற்றுள்ள அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், முதலமைச்சர் அவர்கள், ககன்தீப் சிங் பேடி அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தார்.

---

### பிப்ரவரி 3, பேரறிஞர் அண்ணா நினைவு நாள் :

# நினைவுகள் நம் நெஞ்சிலிருந்து நீங்கிடுமோ?



**மறப்போம், மன்னிப்போம் - என்ற மாண்பில்; எதையும் தாங்கும் இதயம் வேண்டும் - என்ற பூமிப் பொறுமையில்; ஆணை பிறந்து விட்டது, அழைப்புக் கிடைத்து விட்டது, அணிவகுப்பிலே வந்து சேர் - என்ற அன்பழைப்பில்; இப்படை தோற்கின் எப்படை வெல்லும் - என்ற அறைகூவலில்; மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு - என்ற அரசியல் நாகரிகத்தில்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு - என்ற கழக இலக்கணத்தில்; கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு - என்ற சாந்தச் சிந்தனையில்; ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் - என்று உருகிடும் இரக்கத்தில் ;**

**ஒன்றே குலம், ஒருவனே தேவன் - என்ற பிரகடனத்தில் ; நேரு பண்டிதரோ கட்டி முடிக்கப்பட்ட கோபுரம், நானோ கொட்டிக் கிடக்கும் செங்கல் - என்ற ஆளுமை உயரத்தில்; நானோ மிகச் சாமானியன், தீர்க்க வேண்டிய பிரச்சினைகளோ மிக மிக அசாமானியமானவை - என்ற தன்னடக்கத்தில்; தம்பி வா, தலைமை ஏற்க வா - என்ற உயர்ந்த உள்ளத்தில்; ஏழை ஈடேற வேண்டும், ஏழை உரிமை பெற வேண்டும், ஜாதிபேதம் ஒழிய வேண்டும், ஒற்றுமை மலர வேண்டும் - என்ற இலட்சிய உறுதியில்;**

**பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிய நினைவு நம்மிடையே நிலைத்திருக்கிறது.**

தமிழ் நாடு - என்ற நம் தலைநிமிர்ப் பெயரும் ; தமிழ், ஆங்கிலம் - என்று இந்திக்கு நிரந்தரத் திரைபோட்ட இருமொழித் திட்டமும்; சுய மரியாதைத் திருமணச் செல்லுபடிச் சட்டமும்; அண்ணா அவர்களின் அரும்பெயரை ஆண்டாண்டுகளுக்கும் அனைவர்க்கும் நினைவூட்டிக் கொண்டே இருக்கிறது !

ஆற்றோரத்திலே ஒரு அருநெல்லி மரம், அங்கே ஆண்டவனுக்கு ஓர் ஆலயம், அருகிலே ஆணைக்கால் மண்டபம், அமுதவல்லி தன் ஆசை நாயகன் அரும்பு மீசை அறிவானந்தனுக்காக அலைக் கழிக்கப்பட்ட மனத்தோடு அமர்ந்திருந்தாள் - என்ற அண்ணாவின்

ஆரம்பகால அடுக்கு மொழியையும், அதை ஆவலுடன் கேட்டு ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்த அன்னைத் தமிழ்க் கூட்டத்தையும், நம் நினைவிலிருந்து அகற்றுதல் அவ்வளவு எளிதாமோ?

வேஷமணியாத வேதாந்தி, மோடி செய்யாத மாது, ஜோடி இல்லாத மாடப் புறா, சேடி இல்லாத ராஜகுமாரி; - என்ற அண்ணாவின் அழகுதமிழ், இன்றும் நம் நினைவில் நிழலாட வில்லையோ?

சண்டாள தெய்வமே! உனக்குக் கண் இல்லையோ? ஆயிரம் கண்ணுடையாள் என்று அர்ச்சிக்கிறார்களே உன்னை, அதில் ஒரு கண்ணால் பார்த்திருக்கக் கூடாதா இந்த ஏழைபடும் அவதியை? - என்று அண்ணா 75 ஆண்டுகளுக்கு முன்னரே எழுப்பிய அசைக்க முடியாத கேள்விக் குறியை, பகுத்தறிவு உலகம் இன்றும் பாராட்டி நினைவு கூர்கிறதே ?

நாடோடியாக இருந்து, இப்போது நாடாள வந்திருக்கிறான் - என்ற அண்ணாவின் எழுத்துகள், சாதாரண மனிதனுக்கும் சபை ஏறும் ஊக்கத்தை ஊட்டவில்லையா?

சட்டத்தின் கண்கள் சக்தி வாய்ந்தவை.நீதியையும், நியாயத்தையும் நிலைநாட்டுவது சட்டத்தின் கடமை.ஏழை என்பதற்காகச் சட்டம் இரக்கம் காட்டுவதில்லை; காசில்லாதவன் என்பதற்காகக் கருணை காட்டுவதில்லை. திருடினானா இல்லையா என்பதுதான் சட்டத்தின் கேள்வி.திருடுவதற்கான சூழ்நிலை என்ன என்பது கேள்வி இல்லை - என்ற அண்ணாவின் மொழியை, சட்டம் இன்றும் நினைவில் கொண்டல்லவோ இயங்குகிறது!

சட்டம் ஓர் இருட்டறை; அங்கே வக்கீலின் வாதம் ஒளி விளக்கு; ஏழையால் அதைப் பெற முடியாது - என்று அன்று அண்ணா சொன்னதை, இன்று யாரும் மறுத்திடல் ஆகுமோ? என்றும் நினைவில் நிலவும் உண்மை அன்றோ!

மாளிகை வேண்டாம், மாட்டுக் கொட்டகை போதும்! பட்டுப் பீதாம்பரம் வேண்டாம்,கட்டத் துணி இருந்தால் போதும்;

ஆந்தைகள் அலறுகிறதே என்பதற்காக, கிளிகள் தம் கொஞ்சு மொழியை நிறுத்தியா விடும்?;

இருதயத்துக்கும், இரும்புப் பெட்டிக்கும்தான் ஈஸ்வரன் தொடர்பு வைப்பதில்லையே;

என்பன போன்ற அண்ணாவின் வாதங்களை, எல்லாக் காலமும் நினைவில் கொண்டு, ஏற்றுக்கொள்ளத் தானே செய்யும்!

மனமாசு போக்க, ஒழுக்கத்தை வளர்க்க, துறவிகள் தேவை என்றால், புத்தர் போலப் போதிக்கட்டும் பற்றற்று.பசித்தால் புசித்து,வியர்த்தால் குளித்து, நிழல் கண்டால் படுத்து, செம்பொன்னும் ஓடும் ஒன்றெனக் கொண்டவர்களே துறவி என்று ஆன்றோரும் சான்றோரும் கூறுகின்றனர்;

நல்லறிவை நாத்திகம் என்கிறார், வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் வித்தியாசம் தெரியாததைப் போலே! நய வஞ்சகம் அல்ல நாதன் அருளைப் பெறும் வழி என்று கூறுவதா நாத்திகம்? அன்பும் அறமும் அளித்து, உண்மையை உணர்ந்து,தன்னலத்தைத் தகர்த்தெறிந்து, பொது நலத்துக்குப் பாடுபட்டு, நாட்டைப் பொன்னாடாக்கினால்,மக்களை வாழ வைத்தால்,இறைவன் அருளைப் பெறலாம் என்று எடுத்துக் கூறுவதா நாத்திகம்? எது நாத்திகம் ? அன்பையும் அருளையும் செலுத்திடச் செய்வதற்காக ஏற்பட்ட இடங்களிலே, அக்கிரமம் தலை விரித்தாடினால், அறம் அறிந்தோர் கண்டிக்காமல் இருக்க முடியுமா? கண்டிப்பதா நாத்திகம்?;

முளைவிட்ட கள்ளி காளான்களைக் காட்டுகிறோம், களைந்தெறியச் சொல்கிறோம்.வயல் உம்மிடம் இருந்தது, உபதேசம் என்ற ஏர்கொண்டு உழுதீர். மக்களின் உழைப்பு என்ற நீர் பாய்ச்சினீர்.முளைத்துக் கிடப்பதோ கள்ளி காளான்! தினை விதைத்தால்தானே தினை கிடைக்கும்;

**இப்படி எண்ணற்ற வளமார் வசனங்கள் அண்ணாவின் நினைவை எதிரொலித்த வண்ணம் உள்ளன.அண்ணாந்து பார்த்த மக்களின் செவிகளில் புதுமைப் பூந்தேன் பாய்ச்சியதோடு, அவர்தம் மனதில் புரட்சிகரமான எண்ணங்களையும் விதைத்தது; உறக்கத்தில் இருந்தோரையும்,மாயையில் மயங்கிக் கிடந்தோரையும், சிலிர்த்து விழித்து எழுச்சி கொள்ளச் செய்தது.**

**திராவிட இயக்கம் திக்கெட்டும் சென்று, மக்கள் இயக்கமாக உரு மாற்றம் பெற, பேரறிஞர் அண்ணா அவர்களின் அசல் உத்திகளும், பீடு நடை போட்ட பெருமை மிகு உரை நடைகளும், தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் முதல்முறை வித்தகமாக விளங்கின.அவை இன்றளவும் அண்ணா அவர்களின் நினைவை நம் நெஞ்சத்தில் அடர்த்தியாகப் பரப்பி, குளிர் நிழலாக நீண்டு,நெடிதுயர்ந்து, நிலைத்து நிற்கின்றன!**

★★★

**கி.இராஜமாணிக்கம்**

★★★